**தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழுள்ள ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன மாவட்ட செயலகத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 266 – வவுனியா மாவட்ட செயலகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 மே 30 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வவுனியா மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.16 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் அட்டவணையில் பொழிப்பாக்கி தரப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1 | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாகத் தயாரிக்கப்படாமை | 2.1.1 |
| | | 2 | பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை | 2.13 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டிற்கான ஒழுங்கமைப்பு வெற்றியளித்துள்ளது என்பதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை | | அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக் கொள்ளல் | 2.16 |

| | | | |
|---|---|---|---|
| | சரியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்றை முறைப்படியாகவும் முழுமையாகவும் தாமதமின்றியும் சேகரித்துக்கொள்வதற்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பணத்தை கணக்கீடு செய்வதற்கும் அரசாங்கத்திற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்வதற்கு அதிகாரம் வழங்குவதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குவதனை மேற்பார்வை மற்றும் பரிசோதனை செய்வதற்கும் அவை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து அதற்காக தாமதமின்றியும் சரியாகவும் கொடுப்பனவு செய்வதற்கு ஒழுங்குவிதிகள் வழங்குதல். | | |
| 128(1)(ஈ) | பெறுனவனவுகள், கொடுப்பனவுகள், வழங்கல்கள் என்பவற்றிற்காக போதியளவு உள்ளக சோதனை முறைமை பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதாகவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வு செய்யும் போது அவ்வாறு தீர்வு செய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கி உள்ளன எனவும், | சொத்துக்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.4 |
| 128 (1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் வேண்டப்படுகின்ற தகவல்கள், கூற்றுக்கள் மற்றும் அறிக்கைகளை சரியான வேளையில் சமர்ப்பிப்பதாகவும் | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை தாமதித்து சமர்ப்பித்தமை | 2.1.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(எ) | அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரிப்பது தொடர்பான செயல் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையை உரிய வேளைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைத்தல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்ககூற்றிலுள்ள குறைபாடுகள் | 2.10 |
| 128(1)(ஏ) | நிலுவையாகக் காணப்பட்ட கட்டணங்கள் முதலியவற்றை அறவீடு செய்வதற்கு விசேட ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்துவதற்கு மற்றும் அந்த நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணம் தொடர்பாக அவற்றினை அறவீடு செய்வதனைத் துரிதப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகள் தொடர்பாக ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது ஏனைய தரப்பினர்களால் பணிக்கப்பட்டவாறு தமக்கு அறிக்கையிடுதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிலுள்ள நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.10.1 |
| 128(1) (க) | கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது பொறுப்புக்களுக்கு உட்பட்டுள்ள செலவுத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிதி ஆண்டு இறுதியில் ஒதுக்கீட்டுக் கணக்கு பிரதான உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என்பது (நி.பி 150 ஐ பார்க்க) | ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.9 |
| 128(1) (கூ) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுவதாகவும் பொறுப்பாகும். | நிதி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படாமை. | 2.16 |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 யூன் 05 ஆந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

மாவட்ட செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென ரூபா 69.818 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 69.790 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

#### 2.2.1 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துதல்

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் பெறுகைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 796,279 தொகையான கொள்வனவுகள் பிராந்திய பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் இடம் பெற்றிருந்தும் 2017 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவிற்காக மாவட்ட செயலாளரின் அங்கீகாரம் 2017 நவம்பர் 10 ஆந் திகதி வரை கிடைத்திருக்கவில்லை.

(ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.2(அ) ஆம் பந்தியின் பிரகாரம் கேள்விகளைக் கோரும் போது பொருட்களின் வகை, மாதிரி முதலிய விபரம் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 204 பிளாஸ்ரிக் கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 199,716 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.5 (ஆ) பந்தியிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக கணக்குகள் பிரிவு மற்றும் தாபனப் பிரிவில் அலுமினியக் கதவுகள் மற்றும் பொருத்திகளுக்காக ரூபா 68,500 தொகை ஒரு தனியார் நிறுவனத்திற்கு நேரடி ஒப்பந்தத்தின் பேரில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2012 பெப்ரவரி 23 ஆந் திகதிய பெறுகைக் கையேட்டிற்கான மேலதிகம் 21 இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது பெயர்ப்பலகை தயாரித்தல் மற்றும் குடும்ப விண்ணப்ப படிவங்களை அச்சிடலுக்காக ரூபா 98,213 செலவு செய்யப்பட்டிருந்தது.

(உ) அலுவலகத்தின் மேல் மாடியில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பிரிவை அறைகளாகப் பிரிக்கும் ஒப்பந்தத்திற்கு ரூபா 323,550 செலுத்தப்பட்டிருந்ததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் பந்தி தொடர்பாக 2017

மார்ச் 15 ஆந் திகதி வழங்கப்பட்ட மேலதிகம் 33 இன் பிரகாரம் நிர்மாண ஒப்பந்தத்திற்கான கேள்விகள் சமூக அடிப்படையிலான அமைப்புக்களை உள்ளடக்கி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்பட வேண்டிய போதிலும் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பெறுகைக் குழுவின் அங்கத்தவராக பிரதம கணக்காளர் நியமிக்கப்பட்டு 11 கூட்டங்களுக்காக பெறுகைக் குழு அங்கத்துவப் படியாக ரூபா 148,000 தொகையும் அக்குழுக் கூட்டங்களில் பதவிநிலை உத்தியோகத்தராக பங்கு பற்றியதற்காக மேலும் ரூபா 88,500 படியும் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைக் குழு அங்கத்தவர்களுக்கு மற்றும் மாற்றீட்டு அங்கத்தவர்களுக்கு அக் கூட்டங்களுக்கு பங்குபற்றுவதற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் கேள்விகளைத் திறக்கும் குழுவிற்கு மாத்திரம் பங்குபற்றியிருந்த 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 39,500 மொத்த தொகை பெறுகைக்குழு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 ஒப்பந்த நிர்வாகம்**

**மாவட்ட செயலகம் - சுற்றுலா விடுதியை திருத்தம் செய்தல்**

2017 ஆம் ஆண்டின் GA/EU/2017/14 ஆம் இலக்க செயற்திட்டத்தின் கீழ் சுற்றுலா விடுதியில் நீர் வடிந்தோடுவதற்காக ரூபா 1,695,374 செலவு செய்து வடிகாண் முறைமை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இவ்வேலைக்காக கொடுப்பனவு செய்த போது நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக ரூபா 85,920 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் புதிதாக நிர்மாணித்து பூர்த்தி செய்யப்பட்ட இச் சுற்றுலா விடுதி பயன்படுத்தப்படாதிருந்தும் குளியலறைகளுக்கு நீர் குழாய்கள் மீண்டும் போடப்பட்டதன் காரணமாக அதற்காக முன்னர் செலவு செய்யப்பட்ட ரூபா 29,341 பணம் சிக்கனமற்ற செலவாக அவதானிக்கப்பட்டது.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**(அ) வாகனங்களின் பயன்பாடு**

மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான மீளாய்வாண்டின் இறுதியளவில் பின்வருமாறு 11 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ் வாகனங்கள் 117,884 கிலோ மீற்றர்கள் ஓடியிருந்தன. அதற்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்க்காக ரூபா 1,459,305 தொகையும், வாகனங்களை சேவை செய்வதற்காக ரூபா 398,443 தொகையும் வாகனங்களைப் பழுதுபார்பதற்காக ரூபா 2,204,504 தொகையும் வாகனங்களைக் காப்புறுதி செய்வதற்காக ரூபா 574,166 தொகையும் ஆக ரூபா 4,636,418 மொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாவட்ட செயலகத்தால் வாகனங்களை ஓடுவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகளைத் தவிர்த்து ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 39.33 செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 252 – 9899 ஆம் இலக்க கெப் வாகனம் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தால் அந்த அறிக்கை 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**2.5 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

**2.5.1 வருடாந்த பாதீட்டு எல்லைகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்தல்**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 2(அ) பந்திக்கு இணக்கமின்றி 04 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 24,226,000 நிதி ஏற்பாடு ரூபா 444,017 ஆல் மிகைத்து ரூபா 446,907 கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**2.6 நட்டங்களும் சேதங்களும்**

தேசிய சமாதானம் மற்றும் ஒருங்கிணைப்பு பணியகத்தின் மூலம் பொருளாதார அபிவிருத்திச் செயற்திட்டங்களை பார்வையிடுதல் மற்றும் சான்றிதழ்களைப் பகிர்ந்தளிப்பதற்காக 2017 யூன் 01 ஆந் திகதி ஒழுங்குபடுத்தப்பட்ட விழாவிற்கு அழைப்பிதழ்களையும் பதாதைகளையம் தயாரிப்பதற்காக ரூபா 66,300 செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த விழாவை அத்திகதியில் நடாத்தாமையின் காரணமாக மேற்கூறிய செலவு அரசாங்கத்திற்கு நட்டமாக இருந்தது.

**2.7 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்ட செயலகத்திற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்ட செயலகத்தால் சரி செய்யப்படாதிருந்த பந்திகளுக்கான தொடர்பு கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) 2015 | 3.6(ஆ) | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பல்வேறு அரசாங்க நிறுவனங்கள், அரசியல்வாதிகளுக்குச் சொந்தமான அலுவலகங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் வழங்கப்பட்டதன் மூலம் உத்தியோகத்தர்களுக்கான இருப்பிட வசதிகள் வழங்குதல் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இல்லங்களுக்கான வாடகை வருமானங்களும் இழக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2016 | 5.1(அ) | மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 17 – 8519 ஆம் இலக்க முச்சக்கரவண்டி இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

மாவட்ட செயலகத்தால் பயன்படுத்தப்படுகின்ற 07 வாகனங்களின் உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.8 முகாமைத்துவ பலவீனங்கள்**

**பிரதேச செயலகம், வவுனியா – அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திலுள்ள அரசாங்க காணிகள் 08 தனிப்பட்டவர்களுக்கு 30 ஆண்டுகள் கால குத்தகைக்கு வழங்கியமைக்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,605,315 குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் X ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் குத்தகைகளை உடனடியாக முடிவுறுத்துவதற்கும் குத்தகைதாரருக்கு காணிக்கான உரிமையை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குத்தகை கால எல்லை தற்பொழுது முடிவடைந்துள்ள மூன்று குத்தகை தாரர்களிடமிருந்து எதுவித குத்தகைப் பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மூன்று குத்தகைதாரர்களிடமிருந்தும் நிலுவைப் பணத்திற்கான வட்டி நிர்ணயிக்கப்பட்டவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு குடும்பத்திற்கு சேற்று மற்றும் மேட்டுக் காணிகள் 1 ஏக்கர் வீதம் மாத்திரம் வழங்கப்படக்கூடியதாக இருந்த போதிலும் 76 குடும்பங்களால் 217 ¼ ஏக்கர் 108 பேர்ச்சஸ்களுக்காக உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**2.9 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்பாடு, சேமிப்பு என்பன.**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 165.08 | 145.24 | 19.83 | 12 |
| | மூலதனம் | 32.56 | 32.55 | 0.01 | 0.03 |
| | மொத்தம் | 197.64 | 177.79 | 19.84 | 10 |
| 2014 | மீண்டுவருபவை | 155.35 | 150.45 | 4.90 | 3 |
| | மூலதனம் | 148.10 | 147.83 | 0.26 | 0.17 |
| | மொத்தம் | 303.45 | 298.28 | 5.16 | 1.7 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2015 | மீண்டுவருபவை | 186.63 | 186.25 | 0.38 | 0.2 |
| | மூலதனம் | 76.62 | 75.82 | 0.80 | 1.04 |
| | மொத்தம் | 263.25 | 262.07 | 1.18 | 0.44 |
| 2016 | மீண்டுவருபவை | 194.9 | 193.63 | 1.27 | 0.65 |
| | மூலதனம் | 60.00 | 59.82 | 0.18 | 0.3 |
| | மொத்தம் | 254.9 | 253.45 | 1.45 | 0.56 |
| 2017 | மீண்டுவருபவை | 199.50 | 196.51 | 2.99 | 1.5 |
| | மூலதனம் | 82.00 | 81.39 | 0.61 | 0.74 |
| | மொத்தம் | 281.50 | 277.90 | 3.60 | 1.27 |

**ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மிகை நிதி ஏற்பாடுகளை வழங்குதல்**

(i) நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் இரண்டு செலவு விடயங்களுக்காகப் பெற்றுக்கொண்ட மேலதிக நிதி ஏற்பாட்டில் முறையே 23 சதவீதம் மற்றும் 51 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 02 செலவு விடயங்களுக்காக ரூபா 3.8 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 3.27 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் செலவு செய்யப்பட்டதன் காரணமாக மிகையானது தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதம் மற்றும் 16 சதவீதமாக இருந்தன.

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஏனைய 25 அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்கள் பல்வேறு செயற்பாடுகளுக்காக முறையே ரூபா 1,990.1 மில்லியன் மற்றும் ரூபா 24.6 மில்லியனாக ரூபா 2,014.7 மில்லியன் கூட்டுமொத்த நிதி ஏற்பாட்டை வழங்கியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 1,905.7 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 109 மில்லியன் அல்லது 5 சதவீதத்திலிருந்து 16 சதவீதம் வரையான வீச்சுடைய சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

(ii) **திவிநெகும திணைக்களம்**

NPPC 0804 ஆம் இலக்க வாகனத்தின் எரிபொருள் நுகர்வு ஒரு லீற்றருக்கு 7 கிலோ மீற்றராக இருந்ததுடன், வாகனம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்கின்ற எரிபொருள் படிக்காக ஒவ்வொரு மாதமும் மேற்கூறிய வாகனம் 980 கிலோ மீற்றர் ஓடியிருத்தல் வேண்டும். மாதாந்த ஓட்ட அட்டவணையின் பிரகாரம் 2017 சனவரியிலிருந்து ஒக்தோபர் வரை 10 மாதங்களுக்குள் ஓடிய தூரம் 4,142 கிலோ மீற்றர்களாக இருந்ததன் காரணமாக எரிபொருளுக்காகப் பெற்ற கட்டுநிதியில் ரூபா 101,413 சேமிப்பு இடம்பெற்றிருந்தது.

**(iii) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனரமைப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய விவகார அமைச்சு**

அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்படுகின்ற வீடமைப்புச் செயற்திட்டம் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* மதிப்பீட்டின் தொடர் இலக்கம் 14 இன் கீழ் வீட்டிற்கு 117 அடி நீளமான வலென்ஸ் போட் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் அச்செயற்பாடு நிறைவேற்றப்படாது வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் 55 வீடுகளுக்கும் வவுனியா பிரதேச செயலகத்தின் 105 வீடுகளுக்கும் முறையே ரூபா 707,850 மற்றும் ரூபா 1,351,350 செலுத்தப்பட்டிருந்தன.

* முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்படாத வீடுகளுக்காக வவுனியா பிரதேச செயலகத்தால் 15 வீடுகளுக்கும் செட்டிகுளம் பிரதேச செயலகத்தால் 02 வீடுகளுக்கும் முழுப் பணமும் செலுத்தப்பட்டதன் காரணமாக முறையே ரூபா 730,000 மற்றும் ரூபா 188,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

* வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்குரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 14 வீடுகளினதும் செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குரிய 06 வீடுகளினதும் வீட்டு உரிமையாளர்கள் ஒரு ஆண்டுகாலமாக குடியிருக்கவில்லை.

* வீடமைப்புத் திட்டம் தொடர்பான உடன்படிக்கையின் 1.5 மற்றும் 1.4 ஆம் பிரிவுகளில் காட்டப்பட்டுள்ளவாறு வீடுகளை நிர்மாணிப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் பிரதேச செயலகத்தின் மூலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் உரிய நியமத்தின் படி நிர்மாணிக்கப்படாத ஒரு வீடு உடைந்து விழுந்திருந்தது.

* செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குரிய கந்தசாமி நகர் கிராம சேவையாளர் பிரிவில் ஒரு நபர் அவருக்குச் சொந்தமான 02 ரூட் காணியுடனான ஒரு வீடு இருந்தும் ஏனைய 02 ரூட் காணிக்காக மேற்கூறிய வகையான ஒரு வீட்டைப் பெற்றிருந்தார்.

## 2.10 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு

### 2.10.1 பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 26601 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதியும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியான வை | இழிவு எல்லை | உள்ளபடியா னவை | உச்ச எல்லை | உள்ளபடியா னவவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 16.0 | 15.9 | 12.0 | 12.2 | 50.0 | 40.6 |

**நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 106,659 பணம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் இந் நிலுவை மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் காணப்பட்டு வந்த போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.11 கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 7002-0-0-284/17 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2017 திசெம்பர் 31 வரையுமான மீதி ரூபா 36,456 கூட்டு மொத்தமாகும். மாவட்ட செயலத்தால் சுட்டிக்காட்டப்பட்ட கட்டுநிதிக் கணக்கு சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் வேண்டிக் கொள்ளப்பட்ட கட்டு நிதிகள், பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டுநிதிகள் என்பன தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாதம் | திட்டமிடப்பட்டவாறு வேண்டிக் கொள்ளப்பட்ட கட்டுநிதி | வேண்டப்பட்ட கட்டுநிதி | பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டுநிதி | திட்டமிடப்பட்டவாறு வேண்டப்பட்ட கட்டுநிதிக்கும் வேண்டிக்கொள்ளப்பட்ட கட்டுநிதிக்கும் இடையேயான வித்தியாசம் | கோரிய கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதிக் கிடையேயான வேறுபாடு |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சனவரி | 28.0 | 28.0 | 34.8 | 00 | (6.8) |
| பெப்ரவரி | 38.0 | 38.0 | 37.4 | 00 | 0.6 |
| மார்ச் | 58.8 | 58.8 | 48.8 | 00 | 10.0 |
| ஏப்ரல் | 84.8 | 84.8 | 59.4 | 00 | 25.4 |
| மே | 154.3 | 154.3 | 38.8 | 00 | 115.6 |
| யூன் | 154.3 | 154.3 | 73.9 | 00 | 80.5 |
| யூலை | 169.3 | 169.3 | 205.0 | 00 | (35.7) |
| ஆகஸ்ட் | 370.7 | 370.7 | 301.9 | 00 | 68.8 |
| செப்தெம்பர் | 476.4 | 476.4 | 211.9 | 00 | 264.5 |
| ஒக்தோபர் | 524.6 | 524.6 | 344.5 | 00 | 180.1 |
| நவம்பர் | 579.9 | 579.9 | 334.4 | 00 | 245.4 |
| திசெம்பர் | 620.5 | 620.5 | 444.8 | 00 | 175.7 |
| மொத்தம் | 3,259.6 | 3,259.6 | 2,135.6 | 00 | 1,124.1 |

(ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்கள் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 90,000 கூட்டுமொத்தமான செயல் நிமித்த கட்டுநிதியானது செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 01 மாதத்திலிருந்து 04 மாதங்கள் வரையான வீச்சுடைய காலதாமதத்தில் கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட்டிருந்தது.

**2.12 பொது வைப்புக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான, மீதிகள் ரூபா 86.2 மில்லியன் கூட்டு மொத்தமாக இருந்ததுடன் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 6.8 மில்லியன் பணம் உாயி செயற்பாடுகளை நிறைவேற்றாது மூன்று மாதங்களாக வைப்புக்களில் வைக்கப்பட்டிருந்தது.

**2.13 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தில் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய நிதிப்பிரமாணம் |
|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஆ) | பிணை பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |

**2.14 இணக்கமின்மைகள்**

**2.14.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள். |
|---|---|---|
| **நியதிச்சட்ட ஒழுங்கு விதிகள்** | **ரூபா** | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| (i) vii ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பந்தி | 29,338 | அரசாங்க விடுமுறை தினத்துடன் சேர்த்து அதற்கு முன்னர் அல்லது அதற்கு பின்னர் வரும் தினத்தில் வேலைக்கு வருகை தந்தமை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான 07 கொடுப்பனவுச் சந்தர்ப்பங்கள் மாவட்ட செயலகத்திலும் 10 சந்தர்ப்பங்கள் திவினெகும திணைக்களத்திலும் மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. |
| (ii) viii ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பந்தி | 22,611 | நாளாந்தம் செய்கின்ற திணைக்கள ரீதியான வேலைகளுக்காக விடுமுறை தினப்படிகள் பெற்றுக்கொள்ள முடியாத போதிலும் உத்தியோகத்தர்களின் விடுமுறை தினத்தில் வேலை |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்வதனை அங்கீகரிக்கும் கடிதத்தின் பிரகாரம் வழக்கமான கடமைகளுக்காக விடுமுறை தினச் சம்பளம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) | viii ஆம் அத்தியாயத்தின் 10.1 (அ) பந்தி | 22,368 | தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறை தினத்தில் வேலை செய்வதற்காக படிகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஊழியர் 08 மணித்தியாலம் சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் 09 சந்தர்ப்பங்களின் பொது சேவைக்காலம் பூர்த்தி செய்யப்படாதிருந்தும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

-----------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(1) (அ), (3) (அ) மற்றும் (4) | - | மீளாய்வாண்டின் யூலை மாதத்தின் போது PA 4891 ஆம் இலக்க வாகனம் விபத்துக்குள்ளாகியது சம்பந்தமாக பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பானவர்களை நிர்ணயிக்கும் தொடக்க அறிக்கையினை வழங்குவதற்கும் முழுமையான அறிக்கையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிருவாக சுற்றறிக்கை

-------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை. | - | ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனத்தை தனிப்பட்ட பாவனைக்காக ஈடுபடுத்துவதாக இருந்தால் உத்தியோகத்தரின் மாதாந்தச் சம்பளத்தில் ரூபா 350 அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் அதற்கு முரணாக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனம் தனிப்பட்ட பாவனைக்கு ஈடுபடுத்தியமை தொடர்பாக அறவீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2004/05 மற்றும் 2005/11 ஆம் இலக்க மாகாண காணி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் 2008/04 ஆம் இகலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை. | - | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்குப் புறம்பாக பின்வரும் நபர்களுக்காக காணி அபிவிருத்தி உத்தரவுப் பத்திரங்கள் (LDO) வழங்கப்பட்டிருந்தன. |

| | **நபர்கள்** | **உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| (i) | கிராம உத்தியோகத்தர்கள் | 21 |
| (ii) | இளம் வயதினர்கள் | 03 |

| | | |
|---|---|---|
| (iii) | அரசாங்க உத்தியோகத்தர்கள் | 182 |
| (iv) | வெளிநாட்டு பிரசா உரிமைகளைக் கொண்ட வெளிநாடு சென்றுள்ளவர்கள் | 58 |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2010 திசெம்பர் 19 ஆந் திகதிய 04/2010 ஆம் இலக்க சுற்றாடல் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை. | - | பாலை, முதிரை ஆகிய மரங்களை வெட்ட முடியாது என்ற போதிலும் பிரதேச செயலகத்தால் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசாங்க காணிகளிலுள்ள பாலை மற்றும் முதிரை மரங்கள் முறையே 374 மற்றும் 77 மரங்களை வெட்டி அகற்றுவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2005/06 ஆம் இலக்க மாகாண காணி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் 2002/05 ஆம் இலக்க காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை. | - | காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 104,106 மற்றும் 109 ஆம் இலக்க பிரிவுகளுக்கு முரணாக 49 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. |

## 2.15 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.15.1 இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனத்திற்கான செலவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் ஆளணி வேதனச் செலவுத் தொகுதிக்காக ரூபா 152.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 33 | 28 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 20 | 09 | 11 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 451 | 352 | 99 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 67 | 60 | 07 |
| (v) | அமையம் / ஒப்பந்தம் | - | - | - |
| | மொத்தம் | 571 | 449 | 122 |

(ஆ) மாவட்ட செயலகத்தில் வெற்றிடமாகக் காணப்பட்ட 02 அலுவலகப் பணி உதவியாளர் பதவிகளுக்காக அமைய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இரண்டு ஊழியர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 723,896 செலுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.16 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

---

மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பணத்தை பொறுப்பேற்றல் மற்றும் பணத்திற்குப் பொறுப்பாக இருக்கின்ற மற்றும் களஞ்சியத்திற்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற 99 உத்தியோகத்தர்களால் நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் பிணை வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.